<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>
<u>அசல் வழக்கு எண்.20/2025</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மோகனாம்பாள் | வட்டம் | : | நாமக்கல் |
| த/பெ. | : | | மாவட்டம் | : | சேந்தமங்கலம் |
| க/பெ. | : | இளையராஜா | தொழில் | : | |
| கிராமம் | : | ரெட்டிபட்டி | வயது | : | 29 |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 20.01.2024ம் தேதியிட்ட விருப்புறுதி ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 10.09.2018ம் தேதியிட்ட மனைவரி தோராய பட்ட ஒளியச்சு நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 25.05.2023ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு சான்று நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 26.05.2023ம் தேதியிட்ட புல வரைபடம் சான்று நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 03.10.2023ம் தேதியிட்ட சார்பதிவாளர் கொடுத்த பதில் மனு ஒளியச்சு நகல் **வா.சா.ஆ.5** ஆகவும், 27.11.2023ம் தேதியிட்ட மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனு ஒளியச்சு நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 06.01.2016ம் தேதியிட்ட வாதியின் ஆதார் அட்டை ஒளியச்சு நகல் **வா.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.09.03 17:59:46 +0530

District Munsif